Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மாணவர்ச் சுன்றப்பள்ளிகளுக்கான சேவை
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, மார்ச் 29 2024 | இதழ் 258

# பாஜக பிராம்மண கட்சி ஆனால் தமிழக எம் பி பட்டியலில் ஒரு பிராமனருக்கும் சீட் கிடையாது வைரம் சின்னத்தில் நிற்கும் அறவோர் முன்னேற்ற கழகத்தின் பிராம்மண இளைஞர்களை ஆதரிப்பீர் - நிறுவன தலைவர் வழக்கறிஞர் ராஜாளி சீ ஜெயபிரகாஷ்

சென்னை, 29 மார்ச் 2024: #எங்கே_பிராம்மண_வேட்பாளர்கள் மோடிஜிக்கு_வலுசேர்க்க_ஆதரிப்பீர்_வைரம். அறவோர் முன்னேற்ற கழகம் மத்திய பாஜக விற்கு எதிரானது என்கிற பொய்பிரசாரத்தை முறியடிக்க வாக்களிப்பீர் வைரம்... பிராம்மண சமுதாயமே தயைகூர்ந்து சிந்திப்பீர்... வைரம் பாய்ந்த நெஞ்சுரத்தோடு வைரம் சின்னத்தில் நிற்கும் அறவோர் முன்னேற்ற கழகத்தின் பிராம்மண இளைஞர்களை ஆதரிப்பீர்...

ஆண்டாண்டுகாலமாக நாம் மாற்றுகட்சிகளுக்கு வாக்களித்து சாதித்தது என்ன... நம்சமுதாயத்திற்காக ஒற்றுமையை நிலைநாட்ட வாக்குவங்கியை உருவாக்க நமக்கான கட்சி அறவோர் முன்னேற்ற கழகத்தை ஆதரிப்பீர்.. பாஜக பிராமண கட்சி சார் அதுக்குதான் பிராம்மணன் ஒட்டுபோடனும் என்கிறீர்கள்... (பிராம்மண சமுதாயம் உள்ளிட்ட) ஈ டபிள்யூ எஸ் பிரிவினருக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை தமிழகத்தில் அமல்படுத்தவிடமாட்டோம் என அறிவித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள பாட்டாளிமக்கள்கட்சி விற்கும் பாமக அங்கம்வகிக்கும் தமிழக பாஜக விற்காக உங்கள் வாக்கு...

2ஜி வழக்குமூலம் காங்கிரஸ் ஆட்சியை பறிகொடுக்க திமுக வீழ பாஜக ஆட்சியமைக்க காரணமான பழைய பஞ்சாங்கம் சுப்பிரமணி சுவாமியை நான் சந்திக்கவேண்டிய அவசியமில்லை என தில்லாக கர்ஜித்த மற்ற அனைத்து ஜாதிதலைவர்களையும் சமுதாய தலைவர்களையும் அவர்களின் இல்லத்திலேயே சந்தித்து ஆதரவு கேட்கும் அண்ணாமலையார் கட்சிக்கா உங்கள் ஓட்டு...

ராஜாவும் ராகவனும் வேதா சுப்பிரமணியனும் மைத்ரேயனும் சுப்பிரமணி சுவாமியும் திட்டமிட்டு ஒதுக்கபடுவது ஏன்... தமிழகத்தில் 39 வேட்பாளர்களில் ஒருவர் கூட பிராம்மண வேட்பாளர் இல்லையே ஏன்... அண்ணாமலையாரின் கொங்கு வேளாள கவுண்டர் பாஜக வேட்பாளர்கள்

1 அண்ணாமலை - கோவை 2. ஏ பி முருகானந்தம் - திருப்பூர் 3. வசந்தராஜன் - பொள்ளாச்சி 4. வி.வி. செந்தில்நாதன் - கரூர் 5. கே.பி.ராமலிங்கம் - நாமக்கல் 6. நரசிம்மன் - கிருஷ்ணகிரி வன்னியர் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 7. அஸ்வத்தாமன் - திருவண்ணாமலை நாடார் சமுதாயத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர்கள் 8. பால் கனகராஜ் - வடசென்னை 9. தமிழிசை - தென் சென்னை 10. பொன்னார் - கன்யாகுமரி பறையர் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர்கள் 11. கார்த்தியாயினி - சிதம்பரம் 12. எஸ் ஜி எம் ரமேஷ் - நாகபட்டினம் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர்கள் 13. பாலகணபதி - திருவள்ளூர் 14. ஜான்பாண்டியன் - தென்காசி ரெட்டியார் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 15. இராம ஸ்ரீனிவாசன் - மதுரை நாயுடு சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 16. ராதிகா சரத்குமார் - விருதுநகர் அருந்ததியர் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 17. எல் முருகன் - நீலகிரி பார்க்கவ குலம் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 18. பச்சமுத்து - பெரம்பலூர் செட்டியார் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 19. வினோஜ் பி செல்வம் - மத்திய சென்னை கள்ளர் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 20. கருப்பு முருகானந்தம் - தஞ்சாவூர் மறவர் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 21. நயினார் நாகேந்திரன் - நெல்லை முதலியார் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 22. ஏ.சி. சண்முகம் - வேலூர் யாதவர் சமூகத்தை சேர்ந்த பாஜக வேட்பாளர் 23. தேவநாதன் - சிவகங்கை எல்லாம் இருக்காங்க... ஒரு பிராமணர் கூட இல்ல சார் இருந்தாலும் அது பக்கா பிராமண கட்சி என்கிறீர்களே...

தமிழக பாஜக தலைவர்களின் அஜெண்டா சூழ்ச்சி திட்டம் முட்டுகொடுக்கும் என் சமூகமே சிந்திப்பீர்... மேல்சபா எம் பி யாக இன்னும் ஆறு வருடம் பதவிகாலம் இருக்கும்

எல். முருகனுக்கு எம் பி சீட்... கவர்னராக நான்கு ஆண்டுகள் பதவிஇருக்கும்.. பிராம்மண வேட்பாளர் இல்லாததால் பிராம்மணர் அதிகம் இருக்கும் தென்சென்னை தொகுதியில் டாக்டர் தமிழிசைக்கு எம் பி சீட்.... இரண்டு ஆண்டுகாலம் பதவியிருக்கும் நைனாருக்கு எம் பி சீட் நேற்றுவந்த ராதிகாவுக்கு எம் பி சீட்... தோத்தாலும் ஜெயிச்சாலும் கன்னியாகுமரிதொகுதியை பட்டாபோட்டு தொடர்ந்து நிற்கும் பொன்னாருக்கு எம் பி சீட்.. நாம் எண்ணதான் ஒதுக்கினாலும் பிராம்மணர்கள் ஒன்றுசேரமாட்டார்கள் பிராம்மணர்கள் நம்மைதவிற வேறு எங்கும் செல்லபோக்கிடமில்லை என்கிற ஆணவம். தமிழக பிராம்மண சமுதாயமே சிந்தித்து வாக்களியுங்கள்..

கண்மூடிதனமாக ஆதரிக்காதீர்கள்... தமிழக பாஜக தலைவர்கள் பிராம்மண ஒழிப்பு எண்ணம்கொண்டவர்கள்.

#திமுக திக விசிக பிராம்மணர்களின் நேரடி எதிரிகள்... அவர்களின் இத்தேர்தலில் கூட்டணி தோற்கடிக்கபடவேண்டும்.. மத்தியில் சிறப்பான ஆட்சியைதந்த மோடிஜி யின் கரத்தை வலுபடுத்தும்விதமாக செயல்படாமல் ஜாதிய வன்மத்தோடு பிராம்மணர்களை மறைமுகமாக திட்டமிட்டு ஓரங்கட்டும் தமிழக பாசக வின் வன்மபுத்திக்கு

பாடம்புகட்டுவோம்.. வாக்குககளை சிதறவிடாமல் நல்லாட்சி நாயகர் பாரதபிரதமர் மோடிஜிக்கு வலுசேர்க்க 6 தொகுதிகளில் வைரம் சின்னத்தில் வாக்ளித்துவெற்றிபெற செய்தால் அடுத்து அமையஉள்ள மோடிஜி அரசிற்கு ஆறு அமுக பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரிப்பார்கள்.. பிராம்மணர்களை திட்டமிட்டு ஒதுக்கும் தமிழக பாஜக விற்கு பாடம்புகட்ட நமது வாக்குவங்கியை நிருபித்திட வைரத்திற்கு வாக்களியுங்கள் என்று அறவோர் முன்னேற்ற கழக நிறுவன தலைவர் வழக்கறிஞர் ராஜாளி சீ ஜெயபிரகாஷ் கூறியுள்ளார்.




**நடைபெற உள்ள 2024 பாராளுமன்ற தேர்தலில் தேர்தல் ஆணையத்தில் பதிவுசெய்யப்பட்ட (பிராம்மணர் சமுதாய கட்சியான) அறவோர் முன்னேற்ற கழகம் -(அமுக) வைரம் சின்னத்தில் 6 தொகுதிகளில் போட்டியிடுகிறது... வேட்புமனு தாக்கலும் செய்யபட்டது.**

**1)தென்சென்னை திரு பாலாஜி ஐயர். 2)ஸ்ரீபெரும்புதூர் திருமதி சுதாவல்லி தேவராஜன் ஐயங்கார். 3)சேலம் திரு சுதர்சனம் ஐயங்கார். 4)கிருஷ்ணகிரி திரு.சுவாமிநாதன் ஐயர். 5) தூத்துக்குடி திரு.முத்துகேசவன் சிவாச்சாரியார், 6).திருநெல்வேலி திரு.முத்துராமன் ஐயங்கார். அவர்களை வைரம் சின்னத்தில் வாக்களியுங்கள்.**

பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றவுடன் அனைத்து சமுதாய மக்களின் நலனிற்காக குரல்கொடுப்போம். தமிழகமம் முழுவதும் மதுகடைகளை முற்றிலும்மூடும் விதமாக பாராளுமன்றத்தில் குரல்கொடுப்போம்.. கனிமவள கொள்ளையை முழுவதும் தடுப்போம். கட்சதீவை மீட்போம். தூத்துகுடி மதுரை திருச்சி விமானநிலையத்திற்கு பசும்பொன் முத்துராமலிங்கதேவர்.வ.உ.சி.பிள்ளை வீரவாஞ்சிநாதஐயர் பெயரை சூட்ட நடவடிக்கை எடுப்போம்.. தமிழகம் அமைதியான வளர்ச்சிபெற்ற மாநிலமாக வளர உயர திகழ உழைப்போம். குறிப்பிட்ட மதத்தை கடவுளை மட்டும் இகழும் பிரிவினைவாதிகள் கட்சிகள் அமைப்புகள்மீது தடைசெய்ய நடவடிக்கை எடுக்கும்வகையில் சட்டம்இயற்ற போராடுவோம். இலவசத்தை முற்றிலும் ஒழிப்போம். அரசுவேலைவாய்ப்பில் பொருளாதாரத்தில் பின்தங்கிய( 106) சமுதாயத்தினருக்கு ஈ டபிள்யூ எஸ் 10 சதவீத இடஒதுக்கீட்டை தமிழகத்தில் அமல்படுத்துவோம். கல்வி மருத்தும் தனியார் வியாபாரமயமாக்களை முற்றிலும் நிறுத்தி முற்றிலும் இலவசமாக வழங்குவோம். அறநிலையதுறையை கலைத்து கோவில்களை ஹிந்துமதத்தினரிடமே ஒப்படைக்க குரல்கொடுப்போம் . விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு இடுபொருட்கள் விதைகள் கருவிகள் முற்றிலும் இலவசமாக வழங்குவோம். நேர்மையான ஊழலற்ற ஜாதி மத துவேசமற்ற நல்லாட்சியை தர ஏழைகளும் தேர்தல்களத்தில் போட்டியிட்டு மக்கள்பணியாற்றலாம் என்பதை நிருபிக்க பணநாயகத்தை வீழ்த்தி ஊழல்பெருச்சாளிகளை மதவிரோதிகளை பிரிவினைவாதிகளை தோற்கடித்து ஜனநாயகம் காக்கபோராடும் அறவோர் முன்னேற்ற கழகத்தின் வேட்பாளர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறசெய்யுமாறு பணிவோடுகேட்டுகொள்கின்றேன்.



# தேர்தல் நடத்தை விதிமீறல்களை படம் பிடித்து புகாராக அனுப்புங்கள்: பொதுமக்களுக்கு தலைமை தேர்தல் அதிகாரி வேண்டுகோள்

சென்னை, 29 மார்ச் 2024: தேர்தல் நடத்தை விதிமீறல்களை படம் பிடித்து புகாராக அனுப்புமாறு பொதுமக்களுக்கு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு நேற்று தலைமைச் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழகத்தில் 21 ஆயிரத்து 229 பேரிடம் உரிமம் பெற்ற துப்பாக்கிகள் உள்ளன. தேர்தல் நேரத்தில் அந்த துப்பாக்கிகளை அருகில் உள்ள போலீஸ் நிலையங்களில் உரிமையாளர்கள் ஒப்படைக்க வேண்டும். அதன்படி, பெரும்பாலானவர்கள் துப்பாக்கிகளை ஒப்படைத்து விட்டனர். இன்னும் 568 பேர் மட்டும் துப்பாக்கிகளை ஒப்படைக்காமல் உள்ளனர். அவர்களில் சிலர் வெளிநாடுகளில் இருக்கலாம். வேறு ஏதாவது காரணங்களால் ஒப்படைக்க முடியாத நிலையில் இருக்கலாம். தமிழகத்தை பொறுத்தவரை சட்டம் ஒழுங்கு பிரச்சினை இல்லை.

'சி-விஜில்' செயலியில் அனுப்பும் புகார்கள், போதிய வீடியோ ஆதாரங்களுடன் இருப்பதால், புகார் அனுப்பிய 100 நிமிடங்களில் நடவடிக்கை எடுப்பது சாத்தியம்தான். பொதுமக்கள் இந்த செயலியை வரும் நாட்களில் பயன்படுத்தி, தேர்தல் நடத்தை விதி மீறல்களை படமெடுத்து அனுப்பி, தேர்தல் நியாயமாக நடைபெற உறுதுணையாக இருக்க வேண்டும். இதுவரை சி-விஜில் செயலியில் 1,383 புகார்கள் வந்துள்ளன. ஒரு வேட்பாளரின் பெயர், வாக்காளர் பட்டியலில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இருந்தால் அவரது வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அதிகாரி நிராகரிக்க முடியுமா? என்று கேட்டால், மனு நிராகரிப்புக்காக தனி காரணங்கள் உள்ளன. வேட்புமனுவை நிராகரிப்பதற்கான காரணங்களை தேர்தல் கமிஷன் தனியாக பட்டியலிட்டுள்ளது. அதில் நீங்கள் சொன்ன காரணம் இருந்தால், அதில் முடிவெடுக்கும் அதிகாரம் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு மட்டுமே உள்ளது. அதில் தேர்தல் கமிஷன் தலையிடாது.

இன்று பொது விடுமுறை தினம். எனவே வேட்புமனுக்களை 29-ந் தேதி வாபஸ் பெற முடியாது. அதற்கு 30-ந் தேதி வரை காலஅவகாசம் உள்ளது. அப்போது வேட்புமனுக்களை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதற்கான நேரம் முடிந்ததும், சின்னம் பெற்றிராத கட்சிகள், சுயேச்சைகளுக்கு சின்னம் ஒதுக்கும் பணி நடைபெறும்.

தங்கம், வைர நகை வியாபாரிகள் என்னை சந்தித்தனர். தேர்தல் நேரத்தில் பறக்கும் படை சோதனைகளால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அசவுரியங்களை தெரிவித்தனர். தங்கம், வெள்ளி நகைகளை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு கொண்டு செல்வதற்கு என்ன மாதிரியான ஆவணங்களை உடன் எடுத்து செல்ல வேண்டும்? என்று கேட்டனர்.

பறக்கும்படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு கைப்பற்றும் நகைகள், வருமான வரித்துறையினரிடம் மேல் விசாரணைக்காக ஒப்படைக்கப்படு கிறது. ஆனாலும் அவை உடனே திரும்பக் கிடைப்பதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டனர். தேர்தல் கமிஷன் விதிமுறைப்படி, நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம் என்று கூறியிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# நாடாளுமன்ற தேர்தல் பரப்புரை புத்தகம்: மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

சென்னை, 29 மார்ச் 2024: வீழட்டும் பாசிசம் வெல்லட்டும் ஜனநாயகம்' என்ற தலைப்பில் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை புத்தகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று, நாடாளுமன்றத் தேர்தலில் பரப்புரை செய்யும் விதமாக தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் முயற்சியில் தொகுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பான 'வீழட்டும் பாசிசம் வெல்லட்டும் ஜனநாயகம்' மத்தியில் மலரட்டும் திராவிட மாடல் ஆட்சி என்ற புத்தகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இந்த புத்தகத்திற்கு 'மலரட்டும் மத்தியில் திராவிட மாடல் அரசு' என்ற தலைப்பில் பீட்டர் அல்போன்ஸ் முன்னுரை எழுதியுள்ளார்.

இதேபோல, மேற்கு வங்க மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் கோ.பாலசந்திரன் 'மோடியின் எழுச்சியும், ஜனநாயகத்தின் வீழ்ச்சியும்' என்ற தலைப்பில் கட்டுரையும், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் 'ஊழலின் ஊற்றுக்கண் பா.ஜனதா' என்ற தலைப்பிலும், பி.வில்சன் எம்.பி., 'பாரதிய (தீய) ஜனதா கட்சியின் அரசாட்சியில் நாடாளுமன்றத்தின் அவல நிலை' என்ற தலைப்பிலும், பொது பள்ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு 'மோடி - சமூக அநீதியின் நாயகன்' என்ற தலைப்பிலும் கட்டுரை எழுதியுள்ளனர். மொத்தம் 18 தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளது.

இதைத்தொடர்ந்து, பிற்படுத்தப் பட்ட சமூகத்தினர் உரிமைக்கான கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரத்தின சபாபதி, கனகராஜ் மற்றும் நிர்வாகிகள் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்தனர். அப்போது, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் உயர்கல்வி நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் பட்டியலின மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடுகள் முறையாக செயல்படுத்தும் வகையில் தேசிய மற்றும் மாநிலங்களில் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவருக்குமான ஆணையம் அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டதற்கு நன்றி தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், அமைச்சர் துரைமுருகன், என்.ஆர்.இளங்கோவன் எம்.பி., அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# பொள்ளாச்சி அருகே விபத்து: 2 மருத்துவ மாணவர்கள் பலி

சென்னை, 29 மார்ச் 2024: பொள்ளாச்சி அருகே நான்கு வழிச்சாலையில் அடையாளம் தெரியாத வாகனம் மோதி 2 மருத்துவக்கல்லூரி மாணவர்கள் பலியாகி உள்ளனர்.

பொள்ளாச்சி அடுத்துள்ள கிணத்துக்கடவு கொண்டம்பட்டி பகுதியில் தனியார் சித்த மருத்துவக் கல்லூரி அமைந்துள்ளது□. இதில் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த ஜெய்ஷித்தல் முண்டே வயது (21), ரிஷி கேஸ்ரமேஸ்வர் குட்டே(20)ஆகியோர் 2ம் ஆண்டு படித்து வந்தனர். இந்த நிலையில் 2 பேரும் டீ குடிப்பதற்காக இரு சக்கர வாகனத்தில் சென்றுவிட்டு திரும்பி கொண்டிருக்கும் போது கோவை பொள்ளாச்சி நான்கு வழிச்சாலையில் அரசம்பாளையம் பிரிவு அருகில் சென்றபோது அடையாளம் தெரியாத வாகனம் இருசக்கர வாகனத்தில் முன்பகுதியில் பலமாக மோதியதில் சம்பவ இடத்திலே 2 கல்லூரி மாணவர்களும் பலத்த காயம் அடைந்து பலியானார்கள். இது குறித்து கிணத்துக்கடவு போலீசார் வழக்கு பதிவு செய்து இருசக்கர வாகனம் மீது மோதிய வாகனத்தை நான்கு வழி சாலை அருகில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து தேடி வருகிறார்கள்.

# ரூ.1823 கோடி அபராதம்: காங்கிரஸ் கட்சிக்கு நோட்டீஸ்

சென்னை, 29 மார்ச் 2024: ரூ.1823 கோடி அபராதம் கோரி காங்கிரஸ் கட்சிக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

கடந்த 2018 19ம் நிதியாண்டில், வருமான வரிக் கணக்கை 45 நாள்கள் தாமதமாக தாக்கல் செய்ததற்காக காங்கிரஸ் கட்சிக்கு ரூ.210 கோடி அபராதம் விதிக்கப்பட்டது. இதற்காக சமீபத்தில் இந்திய தேசிய காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ் உள்பட காங்கிரஸ் கட்சியின் 4 வங்கிக் கணக்குகளை வருமான வரித்துறை முடக்கியது. இதை எதிர்த்து டெல்லி ஐகோர்ட்டில் காங்கிரஸ் கட்சி வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை டெல்லி ஐகோர்ட் தள்ளுபடி செய்தது. இந்த நிலையில், காங்கிரஸ் கட்சி கடந்த 2017 18 நிதியாண்டு முதல் 2020 21 நிதியாண்டு வரை 4 ஆண்டுகளுக்கு வருமான வரிக் கணக்கை முறையாக தாக்கல் செய்யவில்லை என்றும், இதற்கு வட்டியுடன் கூடிய அபராதமாக ரூ.1,823 கோடி செலுத்த வேண்டும் என்றும் அக்கட்சிக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் காங்கிரஸ் வழக்கு தொடுக்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. நாடாளுமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில் தங்களின் நிதியை அரசு முடக்க பார்ப்பதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியிருந்த நிலையில், தற்போது ரூ.1,823 கோடி அபராதம் கேட்டு காங்கிரஸ் கட்சிக்கு வருமானவரித்துறை நோட்டீஸ் அனுப்பிய சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 39 தொகுதிகளிலும் மனுக்கள் பரிசீலனை முடிந்தது தமிழகத்தில் 1,085 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்பு: 664 மனுக்கள் தள்ளுபடி

சென்னை, 29 மார்ச் 2024: தமிழகத்தில் 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும் போட்டியிட தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் பரிசீலிக்கப்பட்டதில், 1,085 வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்கப்பட்டன.

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் ஒரேகட்டமாக ஏப்ரல் 19ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 20-ம் தேதி தொடங்கி 27ம் தேதி மாலை 3 மணியுடன் முடிந்தது. 1,403 வேட்பாளர்கள் 1,749 மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். அதிகபட்சமாக கரூரில் 73, வடசென்னையில் 67, தென்சென்னையில் 64 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நேற்று காலை 11 மணி முதல் அந்தந்த தொகுதி பொது பார்வையாளர்கள் முன்னிலையில், மனுக்கள் பரிசீலனை நடைபெற்றது. வேட்புமனுக்கள், பிரமாண பத்திரங்களில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என்பது தேர்தல் நடத்தும் அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மனுவாக ஏற்கப்பட்டது.

வேட்பாளர்கள் தாக்கல் செய்த கூடுதல் மனுக்கள், உரிய ஆவணங்கள் இல்லாத மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

வேட்பு மனு பரிசீலனையின்போது சென்னை, கோவை, சேலம், தேனி, நீலகிரியில் சர்ச்சை எழுந்தது. சில இடங்களில் நீண்ட இழுபறிக்கு பின்னர் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கோவை தொகுதி பாஜக வேட்பாளர் அண்ணாமலை வேட்புமனு தாக்கலில் விதிமீறல் உள்ளதாக கூறி நாம் தமிழர், அதிமுக உள்ளிட்ட கட்சியினர் தேர்தல் நடத்தும் அலுவலரான மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் மற்றும் அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்தனர். தேனி தொகுதி பாஜக கூட்டணி வேட்பாளர் டிடிவி தினகரனின் பிரமாண பத்திரத்தை இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்ய இயலாததால், அதை ஆய்வு செய்த பிறகே ஏற்க வேண்டும் என எதிர்தரப்பினர் கூறினர்.

வடசென்னை தொகுதி தி.மு.க. வேட்பாளர் கலாநிதி வீராசாமி பிரமாண பத்திரம் பெற்ற நோட்டரி பப்ளிக்கின் உரிமம் ஏற்கெனவே காலாவதி ஆகிவிட்டது என்று பாஜக வேட்பாளர் பால்கனகராஜ் வலியுறுத்தினார். ஆனாலும், உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்ட நிலையில், அவர்கள் அனைவரது மனுக்களும் ஏற்கப்பட்டன. ராமநாதபுரம் தொகுதியில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அதே பெயரில் உள்ள 5 பேர் என 6 சுயேச்சைகளின் மனுக்களும் ஏற்கப்பட்டன.

தமிழகத்தின் 39 தொகுதிகளிலும் மொத்தம் தாக்கல் செய்யப்பட்ட 1,749 மனுக்களில், 1,085 மனுக்கள் ஏற்கப்பட்டு, 664 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இறுதிப் பட்டியலின் படி, கரூரில் அதிகபட்சமாக 56 மனுக்களும், நாகையில் 9 மனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன.

வடசென்னை தொகுதியில் 31 மனுக்கள், தென்சென்னை 23 மனுக்கள், மத்திய சென்னையில் 58 மனுக்கள் என மொத்தம் 80 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 109 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

விளவங்கோடு சட்டமன்ற தொகுதிஇடைத்தேர்தலுக்கு 22 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 14 மனுக்கள் ஏற்கப்பட்டன.

புதுச்சேரியில் 27 பேரின் மனுக்கள் ஏற்பு

புதுச்சேரி நாடாளுமன்ற தொகுதியில் காங்கிரஸ் சார்பில் வைத்திலிங்கம் எம்.பி., பா.ஜ.க. சார்பில் அமைச்சர் நமச்சிவாயம், அண்ணா தி.மு.க.வில் தமிழ்வேந்தன், நாம் தமிழர் கட்சியில் டாக்டர் மேனகா உள்பட 34 பேர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்து இருந்தனர். நேற்று வேட்புமனு பரிசீலனை நடந்தது.

அப்போது அமைச்சர் நமச்சிவாயம் தனது மனைவி பெயரிலான சொத்து விவரங்களை பிரமாண பத்திரத்தில் காட்டவில்லை. அவர் அமைச்சராக இருந்து தேர்தலில் போட்டியிடக்கூடாது. அவரது மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சுயேச்சை வேட்பாளர் கிருஷ்ணமூர்த்தி வலியுறுத்தினார். ஆனால் அமைச்சராக இருந்து தேர்தலில் போட்டியிட சட்டத்தில் இடம் உள்ளது என்று மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டர் குலோத்துங்கன் கூறினார். மேலும் சொத்து விவரங்களை மறைத்திருந்தால் அதுதொடர்பான ஆவணங்களை தருமாறு கூறினார். ஆனால் ஆவணங்கள் எதுவும் வழங்கப்படாததால் அமைச்சர் நமச்சிவாயத்தின் மனு ஏற்கப்பட்டது.

இதேபோல் காங்கிரஸ் வேட்பாளர் வைத்திலிங்கம் எம்.பி., அ.தி.மு.க. வேட்பாளர் தமிழ்வேந்தன், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா உள்பட 27 பேரின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. போதிய ஆவணங்கள் இணைக்கப்படாதது உள்பட பல்வேறு காரணங்களுக்காக 7 சுயேச்சைகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டும் தேர்தலில் போட்டியிட விரும்பாதவர்கள் தங்களது மனுவை திரும்ப பெறுவதற்கு அவகாசம் நாளை (சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு முடிகிறது. இதனையடுத்து சின்னங்களுடன் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

# விதிமீறல்: பா.ஜ.க. வேட்பாளர் எல்.முருகன் மீது வழக்குப்பதிவு

சென்னை, 29 மார்ச் 2024: தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக பா.ஜ.க. வேட்பாளர் எல்.முருகன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 39 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் ஏப்ரல் 19ந்தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சியினர் தற்போது தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், பா.ஜ.க. வேட்பாளர் எல்.முருகன் மீது தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

எல்.முருகன் கடந்த 25ம் தேதி நீலகிரி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். இவரது வேட்பு மனு நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கிடையே தான் வேட்பு மனு தாக்கல் நாளில் எல்.முருகன் பல்வேறு கோவில்களில் சாமி தரிசனம் செய்தார்.

கடநாடு எனும் கிராமத்தில் உள்ள கோவிலுக்கு எல்.முருகன் சென்றபோது கூட்டம் அதிகமாக கூடியுள்ளது. அதோடு சமுதாய கூடம் அருகே நடத்தப்பட்ட கூட்டத்தில் எல்.முருகன் 100க்கு மேற்பட்டோர் பங்கேற்றுள்ளார். பொதுவாக வேட்பாளர்கள் கூட்டம் நடத்த முறைப்படி அனுமதி வாங்க வேண்டும். ஆனால் இந்த கூட்டத்துக்கு எந்த அனுமதியும் வாங்கவில்லை என கூறப்படுகிறது.

இதுபற்றி தேர்தல் பறக்கும்படை அலுவலரான துணை தாசில்தார் தனலட்சுமி தேனாடுகம்பை போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் எல் முருகன் மீது தேர்தல் நடத்தை விதிமீறியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர மாவட்ட பா.ஜ.க. தலைவர் மோகன் ராஜ் உள்ளிட்டோர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# பிரதமரிடம் சரணாகதி அடைந்துவிட்டு எதிர்ப்பது போல தி.மு.க. இரட்டை வேடம் தமிழகத்தில் அ.தி.மு.க. அலை: எடப்பாடி பேட்டி



சென்னை, 29 மார்ச் 2024: பிரதமரிடம் சரணாகதி அடைந்துவிட்டு எதிர்ப்பது போல வெளியே நாடகமாடுகிறது தி.மு.க. என எடப்பாடி பழனிசாமி கூறினார்.

தமிழகத்தில் அண்ணா தி.மு.க. அலை வீசுகிறது என்றும் அண்ணா தி.மு.க. கூட்டணியை மக்கள் விரும்புகிறார் என்றும் அவர் கூறினார்.

மதுரை கே.கே.நகரில் அமைக்கப் பட்டுள்ள தேர்தல் பணிமனையை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று காலை திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க., தே.மு.தி.க. கூட்டணி ஏற்பட்டதை அடுத்து நிர்வாகிகள் தொண்டர்கள் எழுச்சியோடு செயல்பட்டு வருகிறார்கள். அ.தி.மு.க. கூட்டணிக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 40 இடங்களிலும் வெற்றி பெறும்.

தமிழகத்தில் ஒரே அலை தான் வீசுகிறது, அது அ.தி.மு.க. அலையாக வீசுகிறது. அ.தி.மு.க. இதுவரை என்னென்ன சாதனைகள் செய்துள்ளோம், இனி என்னென்ன சாதனைகள் செய்யப் போகிறோம் என மக்களிடம் கூறுவதால் மக்கள் அ.தி.மு.க. கூட்டணியை விரும்புகிறார்கள்.

பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கள்ளக்கூட்டணி வைத்துள்ளது என முதலமைச்சர் விமர்சனம் செய்வதற்கு அவரே விளக்கம் அளிக்க வேண்டும். இப்படி எல்லாம் யாரும் விமர்சனம் செய்ததே இல்லை. ஒவ்வொரு தேர்தல் சூழ்நிலைக்கு ஏற்ப கூட்டணி அமைக்கப்படுகிறது.

அவதூறு பேசுவதா?

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளியேறிய பின்பும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வேண்டுமென்றே திட்டமிட்டு அண்ணா தி.மு.க. மீது அவதூறு பரப்பி வருகிறது. தோல்வி பயத்தின் காரணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் அ.தி.மு.க.வை பற்றி அவதூறாக பேசி வருகிறார்கள்.

பா.ஜ.க.வுடன் கூட்டணியில் இருந்தோம், பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளியேறிய பின்பு எதை பேசுவது? தி.மு.க. மாதிரி நாங்கள் அல்ல, அ.தி.மு.க. கூட்டணி தர்மத்தை கடைப்பிடிப்போம். கூட்டணியில் இருந்து வெளியேறி விட்டாலும் பா.ஜ.க. தவறு செய்தால் நாங்கள் கேட்போம். கூட்டணியில் இருக்கும்போது கட்சியினரை விமர்சனம் செய்யக்கூடாது. அப்படி விமர்சனம் செய்தால் உள்ளடி வேலை செய்வதாக அர்த்தம்.

தி.மு.க.வுக்குத் தான் கை வந்த கலை

கூட்டணி கட்சிகளை விமர்சனம் செய்வது தி.மு.க.விற்கு கைவந்த கலை. கூட்டணி கட்சியினருக்கு அ.தி.மு.க. என்றுமே விசுவாசமாக இருக்கும். தமிழ் நாட்டு மக்களுக்கு பாதிப்பு வருகின்ற திட்டங்களை கடுமையாக எதிர்ப்போம். தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள், யார் தோல்வி அடைவார்கள் என்பதை மக்கள் தான் முடிவு செய்வார்கள்.

அ.தி.மு.க.விற்கும், அதன் கூட்டணி கட்சிகளுக்கும் மக்களிடம் அபரிமிதமான செல்வாக்கு உள்ளது. அதனால் 40 தொகுதிகள் மற்றும் இடைத்தேர்தலில் வெற்றி பெறுவோம்.

தேர்தலில் நிற்க பணம் இல்லை என நிர்மலா சீதாராமன் கூறி இருப்பது அவருடைய சொந்த பிரச்சனை. இதுகுறித்து அவர் தான் கருத்து கூற வேண்டும். ஜனநாயக நாட்டில் யாரும் பெரியவர்கள் இல்லை, அனைவரும் சமமாக உள்ளனர்.

ஓ.பன்னீர்செல்வத்தை எதிர்த்து தேர்தலில் போட்டியிடக்கூடிய 5 ஓ.பன்னீர்செல்வமும் தேர்தலில் நிற்க தகுதியானவர்கள். அ.தி.மு.க.வில் 2 கோடி தொண்டர்களில் நானும் ஒருவன்.

அண்ணா தி.மு.க.வில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் நீக்கப்பட்டது 2 கோடி அண்ணா தி.மு.க. தொண்டர்கள் எடுத்த முடிவு. ஓ.பன்னீர்செல்வத்தை அ.தி.மு.க.விலிருந்து நீக்க எடப்பாடி பழனிசாமி எடுத்த முடிவு அல்ல.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பிரதமரை எதிர்ப்பது போல் வெளியில் வீரவசனம் பேசி வருகிறார். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கருப்புக்குடை பிடித்தால் பிரதமர் கோபித்துக் கொள்வார் என வெள்ளைக் குடை பிடிக்கிறார்.

பிரதமரிடம் சரணாகதி

தமிழ்நாட்டில் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அமைச்சர் உதயநிதி ஓடோடி சென்று பிரதமரை அழைத்து வருகிறார்.

பிரதமரிடத்தில் சரணாகதி அடைந்துவிட்டு வெளியே பிரதமரை எதிர்ப்பது போல் இரட்டை வேடம் போடுகிறார்கள்.

தேர்தலில் மிட்டா மிராசுகள் நின்ற காலம் போய் சாமானிய தொண்டனும் போட்டியிடலாம் என்கிற நிலை உருவாகி இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ, ஆர்.பி.உதயகுமார் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# நாளுக்கு நாள் விலை அதிகரிப்பு தங்கம் விலை ஒரு சவரன் ரூ.51 ஆயிரத்தை தாண்டியது இன்று ஒரே நாளில் ரூ.1,120 உயர்வு




சென்னை, 29 மார்ச் 2024: தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சென்னையில் இன்று ஆபரணத் தங்கம் விலை சவரனுக்கு ரூ.1,120 உயர்ந்து ரூ.51 ஆயிரத்து 120க்கு விற்பனை செய்யப்பட்டு புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. இதனால் இல்லத்தரசிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு குறிப்பிடத்தகுந்த அளவுக்கு குறைந்த தங்கம் விலை, அக்டோபர் 4-ம் தேதி பவுன் ரூ.42,280 என்ற அளவில் விற்பனையானது. இதன் பின்னர் இஸ்ரேல், பாலஸ்தீன போர் எதிரொலியாக அதிகரித்ததங்கம் விலை, தொடர்ச்சியாக உயர்ந்து கடந்த டிசம்பர் 4 ந்தேதி பவுன் ரூ.47,800 என்னும் புதிய உச்சத்தை அடைந்தது.

இதைத் தொடர்ந்து நடப்பாண்டில் தொடர்ச்சியாக தங்கம் விலை உயர்ந்து வருகிறது. நேற்று சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.280 உயர்ந்து ரூ.50,000-க்கு விற்பனையானது.

ஒரே அடியாக ஏற்றம்

இந்த நிலையில், இன்று சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,120 உயர்ந்து புதிய உச்சமாக ரூ.51,120க்கு விற்பனையாகிறது. ஒரு கிராம் தங்கம் விலை நேற்று ரூ.6,250க்கு விற்பனையான நிலையில், இன்று 140 ரூபாய் உயர்ந்து ரூ.6,390க்கு விற்பனையாகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு 30 காசு உயர்ந்து ரூ.80.80-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.300 உயா□ந்து ரூ.80,800-க்கும் விற்பனையாகிறது.

கடந்த திங்கள்கிழமை தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.49,640-க்கும். செவ்வாய்க்கிழமை சற்று குறைந்து ரூ. 49,600-க்கும் விற்பனையானது. புதன்கிழமை கிராமுக்கு ரூ.15 உயா□ந்து ரூ. 6,215-க்கும், சவரனுக்கு ரூ.120 உயா□ந்து ரூ. 49,720-க்கும் விற்பனையானது.

100 ஆண்டுகளுக்கு முன் ஒரு சவரன் ரூ.20

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சரவன் தங்கம் ரூ.20 முதல் ரூ.30-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதன் பின்னர், 1980-ம் ஆண்டில் ஒரு சவரன் ரூ.1,000 என்ற நிலையை கடந்தது. அதன் தொடர்ச்சியாக தங்கம் விலை தொடர்ந்து ஏறுமுகத்திலேயேதான் இருந்து வருகிறது. 2009-ம் ஆண்டில் ரூ.10 ஆயிரத்தையும் தாண்டியது. அதிலும் கொரோனா தொற்றுக்கு பிறகு, அதாவது, 2021-ம் ஆண்டில் இருந்து தங்கம் விலையில் அதிரடி மாற்றத்தை பார்க்க முடிந்தது. 2020-ம் ஆண்டில் ஒரு சவரன் தங்கம் ரூ.30 ஆயிரம் என்று இருந்தது. அது 2021-ம் ஆண்டில் ரூ.35 ஆயிரமாக அதிகரித்தது. அதன் பின்னர், 2022-ம் ஆண்டில் ரூ.40 ஆயிரம் என்ற அளவுக்கு வந்தது. கடந்த ஆண்டில் (2023) ரூ.45 ஆயிரம் என்ற நிலையையும் அடைந்தது.

இந்த விலை உயர்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வாய்ப்பே இல்லை என்ற நிலையில், தங்கம் விலை தொடர்ந்து ஏற்றத்திலேயே இருந்து வருகிறது. நேற்று ஒரு சவரன் ரூ.50 ஆயிரத்துக்கும் விற்பனை ஆகி, தொடர்ந்து வரலாறு காணாத புதிய உச்சத்தை தொட்டது. கடந்த 5 ஆண்டுகளில் பவுனுக்கு ரூ.25 ஆயிரமும், கடந்த ஒரு மாதத்தில் மட்டும் ரூ.4 ஆயிரத்து 600ம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக மெட்ராஸ் தங்கம், வைரம் வியாபாரிகள் சங்க பொதுச் செயலாளர் சாந்தகுமாரிடம் கேட்டபோது, 'சர்வதேச சந்தையில் தங்கத்தின் மீது பெரும் முதலீட்டாளர்களின் கவனம் இருந்து வருகிறது. இதனால் அதன் தேவை அதிகரித்து, விலையும் உயர்ந்து வருகிறது. வரக்கூடிய நாட்களிலும் விலை அதிகரித்து காணப்படும். இடையில் ஓரளவுக்கு விலை குறையும். ஆனால் இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு பவுன் ரூ.55 ஆயிரத்தையும் கடக்கவே வாய்ப்பு அதிகம் உள்ளது' என்றார்.

# தி.மு.க. வேட்பாளர் ஆ.ராசா, அமைச்சர் சிவசங்கர் காரை சோதனையிட்ட தேர்தல் பறக்கும் படை



சென்னை, 29 மார்ச் 2024: தி.மு.க. வேட்பாளர் ஆ.ராசா, அமைச்சர் சிவசங்கர் ஆகியோரின் காரை நடுவழியில் நிறுத்தி தேர்தல் பறக்கும் படையினர் சோதனை செய்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு வெளியானவுடன் தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்தன. இதனையடுத்து கடந்து சில நாட்களாக பறக்கும் படை அதிகாரிகள் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் அதே நேரத்தில் வியாபாரிகள், அப்பாவி சுற்றுலா பயணிகளிடமிருந்து தான் பணம் பறிமுதல் செய்யப்பட்டு வருவதாகவும் இதுவரை ஒரு அரசியல்வாதியிடம் கூட பணம் பறிமுதல் செய்யப்படவில்லை என்றும் வணிகர் சங்கம் தனது அதிருப்தியை தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் அரசியல் பிரபலங்களின் வாகனத்தையும் சோதனையை செய்து வருவதாக பறக்கும் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்று அமைச்சர் சிவசங்கர் காரை நிறுத்தி சோதனை செய்தனர்.

அரியலூர் இருந்து ஜெயங்கொண்டான் என்ற பகுதிக்கு சென்று கொண்டிருந்த போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கரின் காரை நிறுத்தி பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டனர். ஆனால் அவருடைய காரில் எந்த பொருளும் இல்லை என்பதை உறுதி செய்த பின்னரே அவர் தனது பயணத்தை தொடர அதிகாரிகள் அனுமதி அளித்தனர்.

ஆ.ராசாவின் காரை மடக்கிய பறக்கும் படை

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் சாலையில் டானிங்டன் பகுதியில் தேர்தல் பறக்கும் படை அலுவலர் கீதா, சப் இன்ஸ்பெக்டர் சிவராமன் மற்றும் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக தி.மு.க. வேட்பாளர் ஆ.ராசா, சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் ஆகியோர் காரில் வந்தனர்.

பறக்கும் படை அதிகாரிகள் வாகன சோதனை செய்வதைக் கண்டு அவர்களின் கார்களை சாலையோரமாக நிறுத்தி, காரில் இருந்து இறங்கினர். இதையடுத்து அதிகாரிகள் கார்களுக்குள் சோதனை செய்தனர். சோதனை முடியும் வரை காரில் இருந்து இறங்கி வெளியே நின்றிருந்த அவர்கள் பின்னர் அங்கிருந்து கிளம்பி ஊட்டிக்கு சென்றனர்.

தி.மு.க. வேட்பாளர் மற்றும் அமைச்சரின் காரை பறக்கும் படை அதிகாரிகள் சோதனை செய்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட குரல் கொடுத்தீர்களா? தி.மு.க. கூட்டணி எம்.பி.க்கள் பெஞ்சைத்தான் தேய்த்தார்கள்: எடப்பாடி கடும் தாக்கு

சென்னை, 29 மார்ச் 2024: எய்ம்ஸ் மருத்துவமனை எங்கே என்று இன்று கேட்கிறார்களே, பாராளுமன்றத்தில் தி.மு.க. கூட்டணி எம்.பி.க்கள் 37 பேரும் பெஞ்சையா தேய்த்து கொண்டு இருந்தாதார்கள் என்று எடப்பாடி காட்டமாக கேட்டார்.

மதுரை எப்போதும் அண்ணா தி.மு.க.வின் கோட்டை என நேற்று இரவில் நடந்த பிரச்சார கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

மதுரை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் அண்ணா தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து மதுரை பழங்காநத்தம் பகுதியில் நேற்று இரவு பிரமாண்ட பொதுக்கூட்டம் நடந்தது. இதில் அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்று பேசியதாவது: -

மதுரை மக்களின் கூட்டத்தை பார்க்கும் போது வெற்றி முகம் தெரிகிறது. நம்முடைய வேட்பாளர் டாக்டர் சரவணன், திறமையானவர். மக்கள் பிரச்சினைகளை அறிந்து அதை நிறைவேற்றக்கூடியவர். மதுரை என்று சொன்னால் அது அண்ணா தி.மு.க.வின் கோட்டை. இந்த கோட்டைக்குள் யாராலும் நுழைய முடியாது.

5 ஆண்டு காலம் இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர் என்ன நன்மை செய்தார்? ஒன்றுமில்லை. அதனால்தான் அவரை கண்டா வரச்சொல்லுங்க என்றார்கள்.

இங்கு எய்ம்ஸ் மருத்துவமனையை வைத்து எப்பவும் பேசுகிறார்கள். எய்ம்ஸ் மருத்துவமனையை கொண்டு வந்தது அண்ணா தி.மு.க. அரசு. 2019-ல் அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போது நாடாளுமன்ற தேர்தல். அந்த தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்று வந்தார். 5 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஏன் எய்ம்ஸ் அமைப்பதற்கு முயற்சி எடுக்கவில்லை?

5 ஆண்டு காலம் நாடாளு மன்றத்தில் அவர் உள்பட தி.மு.க. கூட்டணியின் 37 எம்.பி.க்கள் பெஞ்ச்சை தேய்த்ததுதான் மிச்சம். தி.மு.க.வும், அதன் கூட்டணி கட்சிகளும் நாடாளுமன்றத்தில் பேசி அழுத்தம் கொடுத்திருந்தால் இந்நேரம் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டி பயன்பாட்டிற்கு வந்திருக்கும். மீண்டும் மதுரை தொகுதியில் கம்யூனிஸ்ட் வேட்பாளராக அவரே நிற்கிறார். அவருக்கு ஓட்டு போட்டு என்ன நன்மை?

ஒரு காலத்தில் தி.மு.க.வும், பா.ஜனதாவும் கூட்டணி அமைத்து வெற்றி பெற்றார்கள். 5 ஆண்டு காலம் தி.மு.க.வினர் மத்திய அமைச்சரவையில் இருந்தார்கள். குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போன்று காங்கிரசுக்கு ஆதரவு தெரிவித்து அங்கு 10 ஆண்டுகள் மத்தியில் மீண்டும் ஆட்சியில் இருந்தீர்கள். அந்த காலக்கட்டத்தில் தமிழ்நாட்டிற்கு தேவையான திட்டங்களை பெற்று தந்தீர்களா, தமிழ்நாடு சந்திக்கும் பிரச்சினைக்கு தீர்வு கண்டீர்களா, முல்லை பெரியாறு, காவிரி பிரச்சினைக்கு தீர்வு கண்டீர்களா? எதுவும் செய்யவில்லை. எனவே உங்களுக்கு ஓட்டு போட்டு என்ன நன்மை?

மேலும் அவர்களுக்கு கொள்கை இருக்கிறதாம். மத்திய மந்திரி பதவிகளுக்காக பாரதீய ஜனதா, காங்கிரஸ் கட்சி ஆட்சிகளில் இருந்த உங்களுக்கு என்ன கொள்கை இருக்கிறது? எனவே அவர்களுக்கு வாக்களித்து எந்த பயனும், நன்மையும் கிடைக்காது. மக்கள் சிந்திக்க வேண்டும்.

அண்ணா தி.மு.க.விற்கு வாக்களித்தால் தமிழ்நாடு வளம் பெறும். தமிழ்நாடு மக்களின் உரிமையை காப்போம். தேவையான நிதியை பெறுவோம். புதிய, புதிய திட்டங்களை கொண்டு வருவதற்கு எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடுபடுவார்கள்.

காவிரி பிரச்சினைக்காக அண்ணா தி.மு.க. எம்.பி.க்கள் 22 நாட்கள் நாடாளுமன்றத்தை முடக்கினார்கள். நாங்கள் அழுத்தம் கொடுத்தோம். அதன் விளைவாக காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது. எய்ம்ஸ் மருத்துவமனைக்காக தி.மு.க. எம்.பி.க்கள் செங்கலை நாடாளுமன்றத்திற்கு கொண்டு காண்பித்து பேச தயாரா?. அங்கு அழுத்தம் கொடுத்து இருந்தால் எய்ம்ஸ் கட்டப்பட்டிருக்கும்.

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று வந்தால் மக்களின் பிரச்சினையை தீர்க்கவேண்டும். அந்த எண்ணம் உங்களுக்கு இல்லை. தி.மு.க குடும்பத்தை சேர்ந்தவர்கள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி, அதிகாரத்தில் இருக்கவேண்டும். இரண்டு பக்கம் அதிகாரத்தில் இருந்தால் கொள்ளையடிக்க வசதியாகிவிடும். அதுதான் அவர்களின் எண்ணம்.

மு.க.ஸ்டாலின் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு வந்தபோதெல்லாம் 'கோபேக் மோடி' என கருப்பு பலூன் விட்டார். தி.மு.க. ஆளுங்கட்சியான பிறகு பிரதமரை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்கிறார். இப்படி இரட்டை வேடம் போடுகிறார். கருப்பு குடை பிடித்தால் பிரதமர் கோபித்துக்கொள்வார் என எண்ணி வெள்ளை குடை பிடித்தவர், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின். இம்சை அரசன் 23-ம் புலிகேசி படத்தில் அண்டை நாட்டை சேர்ந்த அரசர் படை எடுத்து வரும்போது வடிவேலு வெள்ளை கொடி பிடித்து நடனமாடி செல்வார். அதேபோல் முதலமைச்சர் செயல்பாடும் உள்ளது.

நாங்கள். அப்படி அல்ல. பாரதீய ஜனதா கூட்டணியில் இருந்து விலகிவிட்டோம். அண்ணா தி.மு.க. தலைமையில் வலுவான கூட்டணியை அமைத்துள்ளோம்.

நீட் தேர்வை கொண்டு வந்தது காங்கிரஸ், தி.மு.கவும் தான். ஆனால் நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று பொய்யான தகவல்களை சொல்லி அரசியல் ஆதாயம் தேடும் கட்சி தி.மு.க.

நாங்கள் நீட் தேர்வு ரத்து செய்ய பல்வேறு முயற்சி செய்தும் நிறைவேறவில்லை. பின்னர் ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமதித்து 7.5 சதவீதம் உள் இடஒதுக்கீடு கொண்டு வந்து சட்டம் இயற்றினோம். மேலும் ஏழை மாணவர்களுக்கு மருத்துவ கல்வி கட்டணத்தை அரசாங்கமே செலுத்தும் என்று உத்தரவிட்டோம்.

மதுரை நகரில் மக்களுக்காக ரூ.1800 கோடியில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு, லோயர் கேம்ப் முதல் மதுரை வரை இரும்பு குழாய் அமைக்கப்பட்டு அந்த பணிகள் முடியும் நிலையில் உள்ளன. மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையை சிறப்பு மருத்துவமனையாக கொண்டு வந்தோம். மதுரை காமராஜர் பல்கலைக்கழக பகுதியில் மேம்பாலம் கட்டினோம். மூன்று மாவடி முதல் ஆனையூர் வரை ரூ.50 கோடியில் சாலை அமைத்தோம். ரூ.34 கோடியில் புதிய சட்டக்கல்லூரி, வைகை கரையோராம் சாலைகள், 2 தடுப்பணைகள், 2 உயர்மட்ட மேம்பாலங்கள், உலக தமிழ்சங்கம், பாண்டி கோவில் அருகே ரூ.50 கோடியில் உயர்மட்ட மேம்பாலம் என பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளோம். இவ்வாறு அவர் பேசினார்.




# லேடெண்ட்வியு அனலிடிக்ஸ் நிறுவனம், டெசிஷன் பாயின்ட் அனலிடிக்ஸ்-ஐ கையகப்படுத்துகிறது



சென்னை, 29 மார்ச் 2024: உலகளவில் டிஜிட்டல் பகுப்பாய்வு ஆலோசனை மற்றும் தீர்வுகள் வழங்கலில் முன்னணி நிறுவனமாக திகழும் லேடெண்ட்வியு அனலிடிக்ஸ் லிமிடெட், $39.1 மில்லியன் என்ற மொத்த தொகைக்கு டெசிஷன் பாயின்ட் நிறுவனத்தில் நிலுவையிலுள்ள ஈக்விட்டி முதலீட்டில் 70% வாங்குவதற்கு அதன் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருப்பதை இன்று அறிவித்திருக்கிறது. எஞ்சியிருக்கும் 30% பங்குகள், ஒப்புக்கொள்ளப்படும் மதிப்பீட்டு கோட்பாடுகளின் அடிப்படையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் பணம் செலுத்தலுடன் வாங்கப்படும். 2012-ம் ஆண்டில் நிறுவப்பட்ட டெசிஷன் பாயின்ட், உலகளவில் 300+ பணியாளர்களை கொண்டு, செயற்கை நுண்ணறிவால் (ஏஐ) முன்னெடுக்கப்படும் தொழில்-வர்த்தக நிறுவனங்களில் நிலைமாற்றம் மற்றும் வருவாய் வளர்ச்சி மேலாண்மை (ஆர் ஜி எம்) தீர்வுகள் பிரிவில் முதன்மை வகித்து வருகிறது. ஆர் ஜி எம், தேவைக்குறித்த முன்கணிப்பு, விலை நிர்ணயப் பகுப்பாய்வு, புரோமோஷன் பகுப்பாய்வு, ரீடெய்ல் வகையாக்கல், சந்தையாக்கலுக்கான கலவை மாதிரிகள் ஆகியவற்றில் மிக ஆழமான அனுபவத்தைக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனமாகும். சி பி ஜி பிராண்டுகள் மீது கூர்நோக்கத்துடன் செயல்படும் டெசிஷன் பாயின்ட், மைக்ரோசாஃப்ட் மற்றும் புரோமோஷன் ஆப்டிமைசேஷன் இன்ஸ்டிடியூட் (பி ஓ ஐ) ஆகியவற்றிடம் இருந்து விருதுகளையும், கவுரவமிக்க அங்கீகாரத்தையும் பெற்றிருக்கிறது. தங்களது நிறுவனங்களுக்குள் தரவு பகுப்பாய்வு பயன்பாட்டை முன்னெடுத்துச் செல்ல, பார்ச்சூன் 500 பட்டியலில் இடம்பெற்றிருக்கும் கன்சியூமர் பேக்கேஜ்டு குட்ஸ் (சி பி ஜி) வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்படும் மைக்ரோசாஃப்ட் டீம்ஸ்க்கு ஒரு உரையாடலுக்கான ஒரு ஜென் ஏஐ செயலியான பீகல் ஜிபிடி உட்பட செயற்கை நுண்ணறிவால் ஆற்றல் பெறும் தீர்வுகளை உருவாக்குவதில் 10 ஆண்டுகளுக்கும் அதிகமான அனுபவத்தை டெசிஷன் பாயின்ட் கொண்டிருக்கிறது. லேடெண்ட்வியு அனலிடிக்ஸ், பிசினஸில் அடிப்படை நிலைமாற்றத்திற்கான ஆலோசனை சேவையை வழங்கி வருகிறது; நெகிழ்வுத்திறனுள்ள திறன்மிக்க பகுப்பாய்வு செயல்திட்டத்தை உருவாக்கவும் மற்றும் செயல்படுத்தவும் நிறுவனங்களோடு இணைந்து இது செயல்படுகிறது. டெசிஷன் பாயின்ட் நிறுவனத்தை கையகப்படுத்தியிருக்கும் நடவடிக்கை, தர பொறியியல், தர அறிவியல் மற்றும் தர காட்சிப்படுத்தல் ஆகிய பிரிவுகளில் லேடெண்ட்வியு ஏற்கனவே கொண்டிருக்கும் நிபுணத்துவத்தை மேலும் வலுப்படுத்தும்; அத்துடன் பகுப்பாய்விற்கும் மற்றும் ஜென் ஏஐ தயார் நிலைக்கும் கன்சல்டிங் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதிலும் இது கூடுதல் பலம் சேர்க்கும். அதிக கவனம் செலுத்தப்படும் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பா சந்தைகளில் டெசிஷன் பாயின்ட்-ன் தீர்வுகளின் விரிவாக்கப் பணியை துரிதமாக்க முதலீடுகளையும் லேடெண்ட்வியு மேற்கொள்ளும். "தரவின் மூலம் நிலைப்புத்தன்மையுள்ள, இலாபகரமான வளர்ச்சியை நிறுவனங்கள் அடைவதற்கு உதவுகிற வருவாய் வளர்ச்சி மேலாண்மை தீர்வுகளில் டெசிஷன் பாயின்ட்-ன் சிறப்பான பலமே, இதனை கையகப்படுத்துவதற்கான முக்கிய காரணியாக இருந்தது என்று லேடெண்ட்வியு அனலிடிக்ஸ்-ன் தலைமை செயல் அதிகாரி திரு. ராஜன் சேதுராமன் கூறினார். "கூடுதலாக சிறப்பான திறன் கொண்ட 300+ பணியாளர்களை லேடெண்ட்வியு-ன் சி பி ஜி செயல்பாட்டிற்கு இந்நடவடிக்கை அழைத்து வருகிறது. இலத்தீன் அமெரிக்கா சந்தையில் எமது செயல்பாடுகளை விரிவாக்குவதற்கு இது நிச்சயம் உதவும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார். இக்கையகப்படுத்தல் நடவடிக்கை குறித்து லேடெண்ட்வியு அனலிடிக்ஸ்-ன் தலைமை நிதி அதிகாரி திரு. ராஜன் வெங்கடேசன் கூறியதாவது: "டெசிஷன் பாயின்ட்-ஐ கையகப்படுத்துவதன் வழியாக, எமது மைய செயற்பிரிவுகளில் தொடர்ந்து கூர்நோக்கம் செலுத்தும் எமது பொறுப்புறுதியை நாங்கள் மேலும் வலுவாக்குகிறோம். இந்த கையகப்படுத்தலுக்கு எம்மிடம் ஏற்கனவே இருக்கும் ரொக்க இருப்பு நிதி பயன்படுத்தப்படும். இப்பரிவர்த்தனையானது எமது வாடிக்கையாளர்களுக்கு நிலையான மற்றும் முக்கியமான ஆதாயங்களை முன்னெடுக்கும் மற்றும் ஈ பி ஐ டி டி ஏ மதிப்பினை கூட்டுவதாக நிச்சயம் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்."

டெசிஷன் பாயின்ட்-ன் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு ரவி ஷங்கர் இது தொடர்பாக கூறியதாவது, "லேடெண்ட்வியு குழுமத்தின் ஒரு அங்கமாக டெசிஷன் பாயின்ட் இடம்பெறுவது குறித்து நாங்கள் அதிக உற்சாகம் கொண்டிருக்கிறோம். தற்போதைய மேலாண்மை குழுவின் தலைமையிலேயே டெசிஷன் பாயின்ட் தொடர்ந்து நிர்வகிக்கப்படும். வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் லேடெண்ட்வியு கொண்டிருக்கும் வலுவான ஜி டி எம் செயலிருப்பின் ஆதரவும் இதற்கு கிடைக்கும். இந்த இரு நிறுவனங்களும் இணையும்போது கிடைக்கும் கூட்டு சக்தியின் காரணமாக மிக சிறப்பான வாய்ப்புகள் உருவாகும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். லேடெண்ட்வியு-ன் வாடிக்கையாளர்கள் பிசினஸ் பகுப்பாய்வை பரவலாக பயன்படுத்துவதை மேம்படுத்த எமது ஜென் ஏஐ திட்டமான பீகல் சிறப்பான சாத்தியத்திறனை கொண்டிருக்கிறது. கூடுதலாக உலகளவில் இருக்கும் எமது நுகர்வோர் பொருட்கள் துறையைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு லேடெண்ட்வியு-ன் நிரூபிக்கப்பட்ட சந்தையாக்கல் மற்றும் சப்ளை செயின் பகுப்பாய்வு தீர்வுகளை அறிமுகம் செய்ய நாங்கள் மிகவும் ஆர்வத்தோடு இருக்கிறோம்."

"ஜென் ஏஐ செயலிகளை பயன்படுத்துவது என்பது இருந்தால் நல்லது என்ற நிலையிலிருந்து கண்டிப்பாக கொண்டிருக்க வேண்டிய செயல்திறனாக மாறியிருக்கிறது. நீடிப்புத்தன்மையுள்ள வளர்ச்சியை முன்னெடுக்க உலகளவில் பிசினஸ் தலைவர்கள் இதற்கு முன்னுரிமை அளிக்கின்றனர். ஆர் ஜி எம் செயல் உத்திகளை முன்னெடுத்துச் செல்வதில் மிக முக்கியமான பங்கை ஜென் ஏஐ கொண்டிருக்கும். இந்த கையகப்படுத்தல் நடவடிக்கையின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு மேலும் மதிப்பை சேர்த்து வழங்க மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் தரவு பகுப்பாய்வு தீர்வுகளை சிறப்பாக வழங்க லேடெண்ட்வியு தயாராக இருக்கிறது" என்று லேடெண்ட்வியு-ன் தலைமை வாடிக்கையாளர் அதிகாரி திரு கிருஷ்ணன் வெங்கடா கூறினார். லேடெண்ட்வியு அனலிடிக்ஸ்-க்கு பிரத்யேக நிதி மற்றும் சட்ட ஆலோசகராக முறையே லின்கன் இன்டர்நேஷனல் மற்றும் எச் & பி பார்ட்னர்ஸ் செயல்பட்டிருக்கிறது. டெசிஷன் பாயின்ட்-ன் நிதி ஆலோசகர்களாக இக்யுரஸ் கேபிடல் செயல்பட்டது.